ஒன்று பதிவு செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு, இப்பொழுது நான் தெரிவித்த இந்த விவரங்களில் காவல் நிலையமே சம்பந்தப்பட்ட பல சம்பவங்கள் இதிலே இருப்பதால் உறுப்பினர் திரு. இளம்வழுதி அவர்கள் பேசுகின்றபோது ** என்று சொன்னதை அவைக் குறிப்பில் இருந்து நீக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அவர் பேசுகிறபோதே குறிப்பிட்டேன். அந்த லெனின் சம்பந்தப்பட்ட பிரச்சினையை மட்டும் பேசுங்கள் என்று நான் கேட்டிருந்தேன். (குறுக்கீடு) நான் முதலில் சொன்ன தீர்ப்புதான். ஏற்கெனவே நீங்கள் சொன்ன ஒரு கருத்தை நான் நீக்கியதைப்போல, இந்த லெனின் சம்பந்தப்பட்டதற்கு அப்பாற்பட்டு, ** என்று சொல்வது இந்தச் சம்பவத்திற்கு தொடர்புடையது அல்ல, எனவே, அது அவைக் குறிப்பிலே இருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) நீங்கள் ஏதாவது வேறு விவாதத்தின் நேரத்தில் அதைப் பேசலாம் (குறுக்கீடு) இல்லை, இது ஸ்பெஷல் மென்ஷன்தான், நீங்கள் 55-இலே கொடுத்தால்தான் திரும்ப விளக்கம் கேட்கலாம்.

முற்பகல் 11-45

(ஆ) மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி ஆசிரியர்கள் வேலை நிறுத்தம் செய்வதால் எழுந்துள்ள நிலை குறித்து

மாண்புமிகு பேரவைத்தலைவர்: மதுரை காமராஜர் பல்கலைக் கழக ஆட்சிக்கு உட்பட்ட மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரியில் ஏற்பட்ட பிரச்சினை தொடர்பாக அந்தப் பல்கலைக் கழகம் முழுவதும் உள்ள ஆசிரியர்கள் வேலைநிறுத்தம் செய்து வருவதான ஒரு பிரச்சினையை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டுமென்று திரு. எஸ். ஆண்டித் தேவர் அவர்கள் கேட்டுள்ளார்கள். அவர்களுக்கு அனுமதி வழங்கியிருக்கிறேன். திரு. ஆண்டித் தேவர்.

திரு. எஸ். ஆண்டித் தேவர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை திருப்பரங்குன்றத்திலே இருக்கின்ற மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரியில் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் நிர்வாகத்தினருக்கும் ஏற்பட்ட பிரச்சினைகள் குறித்து பேச்சுவார்த்தைகள் நடத்த வேண்டுமென்று சொல்லி ஆசிரியர்கள் கோரிக்கை வைத்தபொழுது திடீரென்று ஒருநாள் வெளி

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.

[1994 மார்ச் 30

[திரு. எஸ். ஆண்டித்தேவர்]

யிலேயிருந்து நிர்வாகம் ஆட்களை இரவிலேயே கொண்டு வைத்திருந்து காலையில் கல்லூரிக்குச் சென்ற ஆசிரியர்களையும் மாணவர்களையும் தாக்கியிருக்கிறார்கள்.

அது தொடர்பாக அந்தக் கல்லூரி ஆசிரியர்களும் மாணவர்களும் தொடர்ந்து போராட்டம் நடத்தி மூன்று மாத காலமாக அந்தக் கல்லூரி மூடிக்கிடக்கிறது.

அவர்களுக்கு ஆதரவாக மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தில் உள்ள ஆசிரியர்களும், மனோன்மணியம் பல்கலைக் கழகத்தின் ஆசிரியர்களும் ஆதரவு தெரிவித்து கலெக்டர் அலுவலகம் முன் தர்ணா போராட்டம் நடத்தினார்கள். தொடர்ந்து போராட்டம் நடத்தினார்கள். தீர்வு ஏற்படவில்லை.

நிர்வாகம் பிடிவாதமாக இருக்கிறது என்று சொல்லி, அந்தக் கல்லூரி ஆசிரியர்கள் மறியல் போராட்டத்திலே ஈடுபட்டு 15 நாட்கள் சிறை சென்றிருக்கிறார்கள். அதற்குப் பிறகும் தீர்வு ஏற்படவில்லை என்று சொன்னவுடனேயே மதுரை காமராஜர் பல்கலைக்கழக, மனோன்மணியம் பல்கலைக்கழக ஆசிரியர்கள் அனைவரும் ஒட்டுமெத்தமாக சென்ற 24-ஆம் தேதியிலிருந்து போராட்டத்தில் ஈடுபட்டதன் காரணமாக கல்லூரி பரீட்சைகள் நடக்க வேண்டிய நாளில் நடக்காமல் தள்ளிப் போடப்பட்டிருக்கிறது; பல் கல்லூரிகளை மூடியிருக்கிறார்கள். இன்னும் கல்லூரிப் பரீட்சைகள் நடக்க வேண்டியிருக்கிறது. இதைக் கருத்திற் கொண்டு மாண்புமிகு அமைச்சரவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதற்கு என்ன தீர்வு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கல்வி அமைச்சர்.

*மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு நீண்ட நாளைய பிரச்சினை. மதுரை மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி 1974-லே தொடங்கப்பட்டது. அதிலே ஒரு நாள் மாணவர் ஆசிரியர் ஆகியோர் தாக்கப்பட்டதாகத் தந்திகள் வரப்பெற்றதை அடுத்து 4—10—1993இல் மண்டல கல்லூரிக் கல்வி துணை இயக்குநர் அவர்கள் அந்த நிலவரம் குறித்து அறிக்கை தர வேண்டுமென்று கேட்டு 13—10—1993 இல் அவர் கடிதம் எழுதினார். அந்தக் கடிதத்தில் 1—10—1993 முதல் இணக்கமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்றும், 4—10—1993 முதல் அனைத்து வகுப்புகளும் நடைபெறுகின்றன என்றும் குறிப்பிட்டு, ஆறு ஆசிரியர்களது தற்காலிகப் பணி நீக்க ஆணையும் ரத்து செய்யப்பட்டிருக்கிறது என்றும் தெரிவித்தார்.

TRUTH ALONE TRIUMPHS

1994 மார்ச் 30]

[பேராசிரியர் க. பொன்னுசாமி]

பின்னர் கல்லூரியில் ஒரு சூப்பர் கமிட்டி என்ற பெயரிலே ஒரு குழு அமைக்கப்பட்டு அதிலே ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. 7 ஒப்பந்தங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அதில் 6-வது ஒப்பந்தம் கல்லூரி முதல்வர் திரு. ரங்க ராமானுஜம் என்பவர் 21—9—1993 அன்று விருப்ப ஓய்வு விண்ணப்பம் தந்திருக்கிறார் என்றும், அந்த விருப்ப ஓய்வு விண்ணப்பத்தை ஏற்றுக் கொள்வது என்று ஒப்பந்தம் ஆகியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து முதல்வர் மூன்று மாதம் முன் அறிவிப்பு விடுப்பில் சென்றார் என்று தெரிவிக்கப்பட்டது.

ஆனால் 6—12—1993 அன்று கல்லூரியின் செயலர் அவர்கள் அரசுக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அதில் முதல்வர் விருப்பு ஓய்வுக்காகக் கொடுத்த 3 மாத அறிவிப்பைத் திரும்பப் பெற்றுக் கொண்டார் என்று தெரிவித்திருக்கிறார். இங்கே தான் பிரச்சினையே தொடங்கியிருக்கிறது.

ஆசிரியர்கள் ஒப்பந்தம் மீறப்படக்கூடாது என்று போராடுகிறார்கள். நிர்வாகம், முதல்வர் தொடர்ந்து இருப்பார் என்று சொல்கிறது.

பின்னர் 3—1—1994-இல் முதல்வர் விடுப்பை ரத்து செய்து விட்டு பணிக்குத் திரும்பியிருக்கிறார். அதனால் பதட்ட நிலை ஏற்பட்டிருக்கிறது. கல்லூரி பின்னர் காவல்துறை பாதுகாப்புடன் இயங்குவதாக, அசம்பாவிதம் ஏதுமின்றி நடப்பதாக முதல்வர் தெரிவித்துள்ளதாக மண்டல கல்லூரிக் கல்வி துணை இயக்குநர் கடிதம் எழுதினார். மீண்டும் பிரச்சினை ஏற்பட்டதால், கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்கள் துணை இயக்குநர் (நிதி) அவர்களை மதுரைக்கு நேரில் சென்று விசாரித்து சமரச முயற்சி மேற்கொள்ளுமாறு பணித்தார்.

முற்பகல் 11-50

21—1—1994-இல் அவர் விசாரணை நடத்தி முயற்சி எடுத்தும் சமரசம் ஏற்படவில்லை. பின்னர் 31—1—1994-ல் இரு சாராரும் கலந்து பேசி சமரசம் செய்து கொள்வது என்று முடிவு எடுக்கப்பட்டது. இக்கூட்டத்தில், மதுரை காமராஜர் பல்கலைக்கழகப் பிரதிநிதி ஒருவரும் கலந்து கொண்டிருக்கிறார். 31—1—1994-இல் கூட்டம் நடைபெறாத சூழ்நிலை ஏற்பட்டு, பின்னர் கல்லூரிச் செயலருக்கு சமரசம் காண முயற்சி எடுக்குமாறு ஆர்.டி.டி. அறிவுறுத்தி இருக்கிறார். ஆசிரியர் சங்கத்தினரையும் சந்தித்து இதுகுறித்து வேண்டிக் கொண்டிருக்கிறார். 17—2—1994-ல் இயக்குநர் முன்னிலையில் பேச்சு நடத்த முடிவெடுக்கப்பட்டு தவிர்க்க இயலாத நிலையில் கூட்டம் தள்ளிப் போடப்பட்டிருக்கிறது. 2—3—1994

[1994 மார்ச் 30

[பேராசிரியர் க. பொன்னுசாமி]

முதல் காலவரையற்ற வேலைநிறுத்தம் செய்ய ஆசிரியர் சங்கம் முடிவெடுத்திருக்கிறது. கல்லூரி முதல்வர் பொறுப்பிலே தற்போது இருக்கிற திரு. பி. வி. பரசுராம் நாயுடு அவர்களிடமிருந்து திரு. என். ராமதாஸ் நாயுடு என்பவருக்கு அந்தப் பதவியை மாற்றுவதற்கு நிர்வாகம் அரசுக்குக் கடிதம் எழுதியிருக்கிறது. இதற்கிடையில் திரு. காமாட்சி நாயுடு என்பவர் புதிய நிர்வாகக் குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டு இருப்பதாகவும் தான் கல்லூரிக் குழுவின் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு இருப்பதாகவும் தெரிவித்து, அதற்குத்தான் ஒப்புதல் தர வேண்டுமென்று கேட்டு கடிதம் அனுப்பியிருக்கிறார். இந்தப் பிரச்சினை மிக கவனமாகப் பரிசீலிக்கப்பட்டது. இதன் மீது மேலும் சில விவரங்கள் கோரப்பட்டு அந்த விவரங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. இதற்கிடையில் கல்லூரிக் கல்வி இயக்குநர் ஆசிரியர் சங்கத்திடம் பல சுற்றுப் பேச்சுக்கள் நடத்தி சுமுகமான தீர்வு காண சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார். எனவே எந்தவித நேரடி நடவடிக்கையிலும் ஈடுபட வேண்டாம் எனவும் ஆசிரியர் சங்கத்தினரை அவர் கேட்டுக் கொண்டார். என்றாலும் 24—3—1994 முதல் ஆசிரியர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளார்கள். மாணவர்கள் தேர்வு எழுதுவது பாதிக்கப்படக்கூடாது என்ற நல்லெண்ண அடிப்படையில் 28—3—1994 அன்று கல்லூரிக் கல்வி இயக்குநர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளை நேரில் அழைத்துப் பேசி இருக்கிறார். இந்தப் பிரச்சினையில் நிரந்தரத் தீர்வு காண சட்டபூர்வமான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுவதால் போராட்டத்தைக் கைவிடுவது அவசியம் என்று தெரிவித்திருக்கிறார். இந்தக் கல்லூரியில் நிர்வாகக் குழுவில் நடைபெறும் பதவிப் போட்டியே இந்தப் பிரச்சினைக்கு ஒரு காரணமாக இருக்கிறது. மேலும் அந்தக் கல்லூரி ஒரு சிறுபான்மையினர் கல்லூரி என்பதால் அரசு மிக கவனமாகப் பரிசீலித்து உரிய நடவடிக்கை மேற்கொள்வதில் சற்றுத் தாமதம் ஏற்படுகிறது என்பதை ஆசிரியர்களும் அறிவார்கள். அரசுக்குள்ள அதிகார வரம்புக்கு உட்பட்டு மிக விரைவில் அரசு உரிய நடவடிக்கை எடுத்து இப்பிரச்சினையைத் தீர்க்கும் என்று கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். பாதிக்கப்பட்டவர்களது பிரச்சினைகளைப் பரிவோடு பரிசீலிக்க மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களது அரசின்மீது நம்பிக்கை வைத்தும் மாணவர்கள் நலன் கருதியும் ஆசிரியர்கள் போராட்டத்தைக் கைவிட்டு உடனடியாகப் பணிக்குத் திரும்ப வேண்டுமென்றும் இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

இன்று 30—3—1994-இல் ஆசிரியர்களுடன் மீண்டும் கலந்துபேசி ஒரு முடிவைத் தெரிவிப்பதாக கல்லூரி ஆசிரியர்கள் சங்கம் தெரிவித்திருக்கிறது. நேற்று 29—3—1994 அன்று

[பேராசிரியர் க. பொன்னுசாமி]

கல்லூரிக் கல்வி மண்டல துணை இயக்குநர் அவர்கள் இந்தக் கல்லூரியின் அன்றாடப் பிரச்சினைகளைக் கவனிக்க வேண்டுமென்று கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்கள் ஆணை (எண் 3985/ஏ1/94 நாள் 29—3—1994) வழங்கியிருக்கிறார். எனவே இதை ஏற்று ஆசிரியர்கள் போராட்டத்தை விலக்கிக் கொண்டு பணிக்குத் திரும்புவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. கவன ஈர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு திரு. இரா அப்பு நடேசன்: இருக்கையில் இல்லை.

ஆண்டிப்பட்டி தொகுதி வைகை அணை, ராஜஸ்ரீ சர்க்கரை ஆலையில் ஏற்பட்ட தீ விபத்தில் 6 பேர்கள் உயிரிழந்தது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு திருவாளர்கள் கே. தவசி, எம். பெரியவீரன் ஆகியோரில் ஒருவர், அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. கே. தவசி.

திரு. கே. தவசி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''மதுரை மாவட்டம், ஆண்டிப்பட்டி தொகுதி, பெரியகுளம் வட்டம், வைகை அணை ராஜஸ்ரீ சர்க்கரை ஆலையில், 8-3-1994 அன்று ஏற்பட்ட விபத்தில் 6 பேர்கள் உயிர் இழந்தது குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

*மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப் பட்டுள்ளது.